

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் நேற்று (11.9.2025) சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் 68ஆவது நினைவு தினத்தையொட்டி, அன்னாரின் நினைவிடத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர் வளையம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், செ.முருகேசன், திருமதி தமிழரசி ரவிக்குமார், செ.சண்முகையா, மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜித் சிங் காலோன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# பேரறிஞர் அண்ணா 117-ஆம் ஆண்டு பிறந்த நாள் ஊர்வலம்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெறுகிறது!

திருவண்ணாமலை, செப். 12 –

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 117–ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா ஊர்வலம் நடைபெறுகிறது. ஊர்வலத்திற்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையேற்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

காஞ்சி தந்த காவியத் தலைவர் – உலக தமிழர்களின் உள்ளங்களிளெல்லாம் சிம்மாசனம் போட்டு, கொலுவீற்றிருக்கும் செந்தமிழறிஞர் – தமிழ்மொழி உணர்வுக்காகவும், தமிழர் மேம்பாட்டிற்காகவும், தமிழ்நாட்டின் சிறப்பிற்காகவும், வாழ்நாளெல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் – கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகிற்கு அறிமுகம் செய்துவைத்த ஆற்றலாளர். இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்று தம்பியர் பெரும்படை கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன், மெட்ராஸ் ஸ்டேட் என்ற பெயரை தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்து, தாய்க்கு பெயர் தந்த தனி பெரும் தனயன் – சுயமரியாதை சுடரொளி – சொக்கவைக்கும் சொற்பொழிவாளர் – எழுத்து வேந்தர் – தென்னகத்தின் மிகப்பெரும் அரசியல் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 117–ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா ஊர்வலம் நடைபெறவுள்ளது.

15.09.2025 திங்கட்கிழமை காலை சரியாக 8.00 மணிக்கு, திருவண்ணாமலை, பெரியத் தெருவில் உள்ள தளபதி கணினி மையம் அருகிலிருந்து, பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்த விழா ஊர்வலம் நடைபெறவுள்ளது. ஊர்வலத்திற்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தலைமையேற்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுரு வச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

கழக தணிக்கைக்குழு உறுப்பினர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே. கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, தெற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் கோ.கண்ணன், வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவர் ஆர்.ராஜசேகர், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ். அம்பேத்குமார், ஒ.ஜோதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஊர்வலத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பொன்.முத்து, ஆர்.சிவானந்தம், கே.ஆர்.சீதாபதி, ஆர்.வேல்முருகன், கே.வி.ராஜ்குமார், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைசெயலாளர் வ.அன்பழகன், மாவட்ட பொருளாளர்கள் எஸ்.பன்னீர்செல்வம், டி.ஏ.தட்சணா மூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் ந.பாண்டுரங்கன், ப்ரியா ப.விஜயரங்கன், க.லோகநாதன், விஜயலட்சுமிரமேஷ், ஜெயராணிரவி, முன் னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கே.வி. சேகரன், கோ.எதிரொலிமணியன், மாநில தொ.மு.ச., பேரவைச் செயலாளர் க.சௌந்தரராசன், சிவ.ஜெயராஜ், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாநகர மேயர் நிர்மலாவேல்மாறன், துணை மேயர் சு.ராஜாங்கம், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பார்வதி சீனுவாசன், துணைத் தலைவர் பாரதிராமஜெயம், தெற்கு, வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், ஏ.ஏ.ஆறுமுகம், ஜெ. மெய்கண்டன், பொன்.தனுசு, எச். சாதிக்பாட்சா, கு.கணேஷ், விஜி(எ) எஸ்.விஜயராஜ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், டாக்டர் பிரவீன்ஸ்ரீதரன், பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி.கே.ஏ. அருண், கற்பகம்சரவணன், உ.நித்யா, வடக்கு மாவட்டம். எவரெஸ்ட் ந.நரேஷ்குமார், மா.ஏழுமலை, என்.கே.ஏ.பாபு, இ.எஸ். டி.கார்த்திகேயன், கே.ஏ.புஷ்பராஜ், டாக்டர் மகேந்திரன், ஜி.பி.அசோக், பி.எஸ்.சாந்தகுமார், ப.மணிகண்டன், அன்னை.சீனுவாசன், பி.செல்வராஜன், ஏ.எம்.சம்பத், அமானுல்லா, இ.மணிகண்டன், தொ.ப.சீ. மதிவாணன், சாது.ஆனந்த், அப்சல் பாஷா, ப.க.மணிவண்ணன், ஆர். ராம்ரவி, இப்ராஹிம் ஷெரீப், மாலினி வினோத் திவாகரன், இராணிவேங்கடேசன்,

வடக்கு மாவட்ட நகர செயலாளர்கள் ஏ.சி.மணி, கே.விஸ்வநாதன், ஏ.தயாளன், தெற்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த. செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன், வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சுப்பிர மணியன், பி.மனோகரன், ஏ.எழில்மாறன், கே.டி.ராமசாமி, என்.டி. மனோகரன், எஸ்.எஸ்.அன்பழகன், எம்.சுந்தர், எஸ்.மோகன், து.மாமது, ஏ.ஞானவேல், என்.சங்கர், எம்.தினகரன், ஜெ.கே.சீனுவாசன், ஏ.ஜி.திராவிடமுருகன், எஸ்.ரவிக்குமார், கே.பி.ஆர்.பி.பழனி, சி.ஆர்.பெருமாள், ப.இளங்கோவன், டி.ராதா, ஏ.சுந்தரேசன், தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் நா. பழனி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன் வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள்

ஏ.சி.வி.தயாநிதி, ஏ.எம்.காசி, எம். கிருஷ்ணமூர்த்தி, வெள்ளைகணேசன், ஆர்.வெங்கடேஷ்பாபு, ஆ. மோகனவேல், ஆர்.நந்தகுமார், அப்சர்லியாகத்பாஷா,

தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செயலாகள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம்.சீனுவாசன், கோ.தனசேகர், ஆர்.முருகன், வி.வெங்கடேசன், கே.கோவர்த்தணன், வேணிஏழுமலை, டி.கே. மோகன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக்கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொள்கிறார்கள்.

### இலண்டன்வாழ் தமிழர்களிடமும் –

# பென்னிகுயிக் குடும்பத்தினரிடமும் முதல்வர் பேசியது நெகிழ வைத்தது!

## கேம்பர்லி தமிழர் – பிரிட்டிஷ் அசோசியேஷன் செயலாளர் சந்தான பீர் ஒலி அறிக்கை!



லண்டன், செப். 12-

லண்டன் வாழ் தமிழர்களிடமும் பென்னிகுயிக் குடும்பத்தினரிடமும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளவளாவியது நெகிழ வைத்தது என்று கேம்பர்லீ தமிழர் பிரிட்டிஷ் அசோசியேஷன் செயலாளர் சந்தான பீர் ஒலி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக கேம்பர்லி தமிழர் பிரிட்டிஷ் அசோசியேஷன் செயலாளர் சந்தான பீர் ஒலி அறிக்கை வருமாறு:-

கலாச்சார இணைப்புத் திட்டம் என்பது இருநாடுகளைச் சேர்ந்த முக்கிய நகரங்கள் ஒருங்கிணைக்கப்படும். இதன்மூலம் கல்வி, சுற்றுலா, வர்த்தகம் உட்பட பல்வேறு துறைகள் சார்ந்த சிறப்பம்ச ங்களை இருநகரங்களும் பரிமாறிக் கொள்ளும். அதன்படி தமிழகத்தில் சென்னை, கோயம்புத்தூர், திருச்சி ஆகிய நகரங்கள் ஏற்கெனவே அமெரிக்கா, சீனா, ஜெர்மனி, மலேசியா உள்ளிட்ட நாடுகளில் உள்ள முக்கிய நகரங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் நூற்றாண்டு காலம் தொடர்புள்ள கேம்பர்லீ மற்றும் மதுரை நகரங்களும் இத்திட்டத்தின்கீழ் இணைக்கப்பட உள்ளன.

தமிழர் பண்பாட்டை மதுரை நகரம் முழுமையாக பிரதிபலித்து வருகிறது. கோயில்களின் பாரம்பரிய விழாக்கள் ஆகியவற்றின் வழியாக மதுரை உலகம் முழுவதும் தமிழர் பண்பாட்டின் மையமாகப் போற்றப்படுகிறது. அதேபோல், கேம்பர்லீ நகரமும் கல்வி, வரலாறு, சமூக மேம்பாடு, சுற்றுலா ஆகிய துறைகளில் தனித்துவமாக விளங்கு கிறது.

இவ்விரு நகரங்களும் ஒருங்கிணைந்தால் பல்வேறு பலன்களை தமிழகம் பெறும்.

கேம்பர்லீ நகரத்தில் 6 பெரிய பல்கலைக்கழகங்கள் உள்ளன. அவற்றில் மதுரை மாணவர்கள் இளைஞர் பரிமாற்றத்தில் கல்வி பயிலலாம். கீழடி உட்பட தொன்மங்கள் குறித்து ஆராய்ச்சிகளை தீவிரப்படுத்தலாம். மதுரையின் கோயில்கள், விழாக்கள், கைவினைப் பொருட்கள் மூலமாக நமது கலாச்சாரம் உலகளாவிய வரவேற்பை பெறும். புதிய தொழில் முதலீடுகள் வரும். சுற்றுலாவை மேம்படுத்துவதுடன் விமானப் போக்குவரத்தும் விரிவு செய்ய

இத்தகைய அம்சங்களை முன்வைத்து முதல்வர் ஸ்டாலின் அவர்களிடம் கோரிக்கை வைத்தோம். இதுசார்ந்து கேம்பர்லீ நகரம் அமைந்துள்ள சர்ரே மாகாணத்தின் மேயரும், கலாச்சார இணைப்பு திட்டத்தில் சேர சம்மதம் தெரிவித்து முதல்வர் ஸ்டாலின் அவர்களுக்கு கடிதம் எழுதியிருந்தார். அதையேற்று கடந்த வாரம் லண்டன் வந்திருந்தபோது இத்திட்டத்தை முன்னெடுப்பதாக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார். இதன்மூலம் இரு நகரங்களும் சிறந்த வளர்ச்சியை பெறும்.

**பென்னிகுயிக் குடும்பத்தினர்!**

லண்டனில் பென்னிகுயிக் பேத்திகள் மேரி மற்றும் செர்லீ ஆகியோரிடம் முதல்வர் பேசினார். அப்போது, "தாங்கள் அவ்வப்போது தமிழகம் வந்து செல்ல வேண்டும். அங்கு யாருமில்லை என நினைக்க வேண்டாம். தமிழகத்தில் உள்ள அனைவரின் இல்லமும் தங்களை வரவேற்கும். அதில் முதல் வீடாக எனது இல்லத்தை நினைத்துக் கொள்ளுங்கள். மேலும், ஏதேனும் உதவிகள் தேவை என்றாலும் நீங்கள் தயக்கப்படாமல் கேளுங்கள்" என்று முதல்வர் உரிமையுடன் பேசியுள்ளார்.

இதை கேட்டு மகிழ்ச்சியில் கண்கலங்கிய பென்னி குயிக் குடு ம்பத்தினர், நிச்சயம் தமிழகம் வருவதாகவும் உறுதி தெரிவித்தனர். பொங்கல் திருவிழா, ஜல்லிக்கட்டு மற்றும் மதுரை கேம்பர்லீ நகரங்கள் இணைப்பு நிகழ்ச்சியில் பங்கேற்கவும் அழைப்பு விடுத்தார். இதைக் கேட்டு நெகிழ்ந்த அந்த நாட்டின் பிரமுகர்கள் தமிழர்களின் நன்றியுணர்வு வியக்க வைப்பதுடன் பெருமைப்பட பேசினார் என்று பிரிட்டன் வாழ் தமிழர்கள் தெரிவித்தனர்.

### கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



காட்பாடி தெற்கு பகுதி, வேலூர் மாவட்டம்.



சோளிங்கர் நகரம், இராணிப்பேட்டை மாவட்டம்.



வந்தவாசி மேற்கு ஒன்றியம், திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



க.பரமத்தி தெற்கு ஒன்றியம், கரூர் மாவட்டம்.



பள்ளபாளையம் பேரூர், கோவை தெற்கு மாவட்டம்.



பட்டிவீரன்பட்டி பேரூர், திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.